10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 25 | திங்கட்கிழமை மே 29 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

3 சிறுமிகளைச் சீரழித்த காமுகர்களுக்கு

## கட்டிவைத்து அடி!

திருகோணமலை, மூதூர், மல்லிகைத் தீவு பகுதியில் தமிழச் சிறுமிகள் மூவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பிரதேசத்தில் தற்போது பதற்றநிலை தோன்றியுள்ளது.

பாடசாலை ஒன்றில் தரம்-5 இல் கற்கும் 10 வயதேயான மூன்று மாணவிகளை, குறித்த பாடசாலையில் கட்டட நிர்மாணப் பணி களில் ஈடுபட்டிருந்த இரண்டு முஸ்லிம் இளைஞர்களே துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தினர்.

இதனையறிந்த ஊரவர்கள் சந்தேக நபர் கள் இருவரையும் மரத்தில் கட்டிவைத்து அடித்தனர். பின்னர் பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த மூன்று சிறுமிகளும் வைத்திய பரிசோதனைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள் ளனர். (அ)

# வீழ்ந்தது ஹெலி!

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்டவர்களை மீட்கும் மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விமா னப்படையின் எம்,ஐ-17 உலங்குவானூ ர்தி ஒன்று இன்று காலை வீடு ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியது. இதனையடுத்து உடனடியாக அது அங் கேயே தரையிறக்கப்பட்டது.


காலி மாவட்டத்தில் உள்ள பத்தேக மவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் எனினும் உலங்குவானூர்தி முற்றாகச் சேதமடைந்தது.

உலங்கு வானூர்தியில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக வெளியேற் றப்பட்டனர்.

உலங்குவானூர்தியில் இருந்தவர்களது உயிர்களை தனது சமயோசிதத்தால் காப்பாற் றிய விமானிக்கு கைபேசியூடாக ஜனாதிபதி மைத்திரி தன் பாராட்டுக் களைத் தெரிவித்துள்ளார். (அ)



## வருகிறது “மோரா” சூறாவளி




மத்திய வங்காள விரிகுடாவின் கிழக் குப் பகுதியில் ஏற்பட்டிருந்த தாழமுக்கம், சூறாவளியாக மாறியுள்ளது. இதனால் நாட்டில் கடுமையான காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் அதிகமாக இருப்பதாக, வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வு கூறியது. குறித்த சூறாவளிக்கு, ‘மோரா’ என்று பெயரிடப் பட்டுள்ளது. வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களி லும் திருகோணமலை மாவட்டத்திலும் சில பிரதேசங்களில் மழை அல்லது இடியு டன் கூடிய மழை பெய்யும். அதேவேளை மேல் மாகாணம், சப்ரகமுவா, தெற்கு, மத் திய மற்றும் வடமேல் மாகாணங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அப்பாடா!
### குறைகிறது நீர்மட்டம்

“வெள்ள அனர்த்தத்துக்கு காரணமாகியிருந்த கங்கைகளின் நீர் மட்டம், தற்போது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து வருகின்றது” என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன தெரிவித் தார். “கங்கைகளின் நீர் மட்டம் குறைவடைந்த போதிலும், மக்கள், தொடர்ந்து அவதானத் துடன் இருக்கவேண்டும்” எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நிவாரண வேட்டையில் யாழ்.பொலிஸார்



தென்பகுதியில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிப்பொருட்களை யாழ் .மாவட்டத்தில் பொலிஸார் சேகரித்து வருகின்றனர்.

தென்பகுதியில் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான அத்தியாவசியப் பொருட்களை தந்துதவுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள் ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் எதிர்வரும் 1 ஆம் திகதி வரை யாழ். பொலிஸ் நிலையத்திலோ அல்லது யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்திலோ ஒப்படைக்க முடியும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.(இ)

## உயர்கிறது உயிர்ப்பலி
# 166
### 104 பேரைக் காணவில்லை

இயற்கை அனர்த்தத் தினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 164 ஆக அதி கரித்திருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலை யம் இன்று காலை வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது. 104 பேர் காணாமல் போயுள்ளனர். 88 பேர் காயமடைந்துள் ளனர். அனர்த்தத்தில் 4 இலட் சத்து 71 ஆயிரத்து 542 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். இதேவேளை 336 நலன்புரி முகாம்களில் 75 ஆயிரத்து 236 பேர் தங்கியிருப்பதாகவும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப் பிட்டுள்ளது. (எ)

## போட்டி பஸ்களால் ‘ஹயேஸ்’ விபத்து



போட்டிக்கு ஓடிய பஸ்களால் ஹைஏஸ் வாகன மொன்று புங்குடுதீவில் விபத்துக்குள்ளானது.

குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை இ.போ.ச பஸ்ஸும், தனியார் பஸ்ஸும் போட்டியிட்டபடி ஒன்றையொன்று முந்தும் வகையில் அதிவேகமாகப் பயணித்தன. இதன்போது எதிர்த்திசை யில் வந்த ஹயேஸ் வாகனத்துடன் தனியார் பஸ் மோதி யது. இதன்போது ஹயேஸ் வாகனச் சாரதி காயங் களுடன் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தார். (இ)

## மீண்டும் மழை

மத்திய மலைநாட் டின் இன்று காலை முதல், மழை பெய்து வருவதோடு கடும்காற்றும் வீசி வருகின்றது. பல இடங்களில் பனிப் பொழிவு அதிக மாக இருப்பதாகவும் கூறப் படுகின்றது.


இதேவேளை நாட்டின் தென்பகுதி உள்ளிட்ட பிரதேசங்களிலும் இன்று மாலை முதல் மீண்டும் கடும்மழை பெய்யக்கூடும் என எச்சரிக்கைவிடுக் கப்பட்டுள்ளது. (அ)

## பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டம்

பருத்தித்துறை கொட்டடி கடற்தொழிலாளர் சங்கத்தின ரால் ஆர்ப் பாட்டம் ஒன்று இன்று முன்னெடுக் கப்பட் டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதி மறுசீரமைப்பு செய்யப் படவுள்ளது. இவ்வாறு துறை முகம் விரிவாக்கம் செய்யப்ப டவுள்ள இடத்துக்குள் கொட் டடிப் பகுதியும் உள்ளடக் கப்பட் டுள்ளது. இதனால் தமது தொழில் பாதிக்கப்படும் என்று தெரிவித்தே, மீனவர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது. கொட்டடிப் பகுதியிலிருந்து இன்று காலை 9.15 மணிக்கு ஆரம்ப மான குறித்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை சென்றது. அங்கு பருத்தித் துறைப் பிரதேச செயலரிடம் மனு ஒன்றும் கையளிக்கப் பட்டது. (அ-11)





# காந்தி மீது 4ஆவது குண்டை ஏவியவர் யார்?

மகாத்மா காந்தியின் மரணத்தில் உள்ள சதியின் பின்னணியை முழுமையாக வெளிக்கொண்டு வர வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மும்பையைச் சேர்ந்த வரலாற்று ஆராய்ச்சியாளரான பங்கஜ் பத்னிஸ் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், "காந்தியின் மரணத்தில் மிகப்பெரிய சதி புதைந்து கிடக்கிறது. அதை வெளியில் கொண்டு வர வேண்டும். இதற்காக புதிய விசாரணைச் சபை அமைக்க வேண்டும்.

பழைய பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையிலும் எனது ஆய்வின்படியும் காந்தியின் உடலில் 4 குண்டுகள் பாய்ந்துள்ளன.

ஆனால் காந்தியைச் சுட்டவரின் துப்பாக்கியில் 7 குண்டுகள் பொருத்தலாம் என்றும் காந்தியைச் சுட்ட பிறகு அதிலிருந்து 4 குண்டுகள் வெளியே எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறியினர்.

அப்படியாயின் காந்தியின் மீது பாய்ந்த அந்த 4ஆவது குண்டு யாருடைய துப்பாக்கியிலிருந்து வந்தது? அது குறித்து ஆராய வேண்டும். காந்தியைச் சுட்ட கோட்சே தவிர இரண்டாவது நபரும் சுட்டுள்ளாரா?" என பத்னிஸ் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ)

# மீண்டும் பதற்றம்

ஜப்பான் கடற்பகுதி நோக்கி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஒன்றை வடகொரியா சோதனை செய்துள்ளதையடுத்து கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த ஏவுகணைச் சோதனையானது வட கொரியாவின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள வென்ஸான் பகுதியிலிருந்து நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து தென் கொரிய ஜனாதிபதி உடனடியாக தேசிய பாதுகாப்பு சபை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளார். அத்துடன், குறித்த நடவடிக்கையை ஆராயவும் உத்தரவிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.



ஜப்பான் கடற்பகுதியில் விழுவதற்கு முன்னர் குறித்த ஏவுகணையானது 450 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்திருக்கலாம் என தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, "வடகொரியாவின் இச்செயல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களுக்கு எதிரானது" என ஜப்பான் அமைச்சரவை செயலர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.(ஓ)




டென்னிஸில் ஆதிக்கம் செலுத்தி வரும் வில்லியம்ஸ் சகோதரிகளில் ஒருவரான வீனஸ் வில்லியம்ஸ், பிரெஞ்ச் ஓபனில் தனது 20ஆவது வருடத்தில் அடியெடுத்து வைத்துள்ளார்.

டென்னிஸ் அரங்குகளில் தங்களுக்கென்று தனி முத்திரை படைத்தவர்கள் வில்லியம்ஸ் சகோதரிகள்.

வீனஸ் வில்லியம்ஸ் 1994ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதி தனது 14 வயதில் தொழில்முறை டென்னிஸ் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தார்.

பின்னர் 2011ஆம் ஆண்டைத்தவிர மற்ற எல்லா ஆண்டுகளிலும் தொடர்ந்து பிரெஞ்ச் ஓபனில் கலந்துகொண்டு வருகிறார். நேற்று பிரெஞ்ச் ஓபன் தொடங்கியது. இது அவருக்கு 20ஆவது தொடராகும்.

இதன்மூலம் பிரெஞ்ச் ஓபனில் தனது 20ஆவது வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

பிரெஞ்ச் ஓபனில் ஒற்றையரில் அவர் பட்டம் வென்றது கிடையாது. பெண்களுக்கான இரட்டையரில் இரண்டு தடவைகள் (1999, 2010) வென்றுள்ளார். (ஐ)

# பிறந்த அடுத்த நொடியில்...




டில்லியில் பிறந்து சிறிது நேரங்களேயான குழந்தை ஒன்று, வேறொருவரின் உதவியுடன் நடக்கப் பழகும் காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகின்றது.

பொதுவாக ஒரு குழந்தை பிறந்து சில மாதங்கள் கடந்த பின்னர்தான் தவழ ஆரம்பிக்கும். பின்பு கொஞ்ச நாட்களுக்கு பிறகு உட்காரத்தொடங்கி, பின்புதான் படிப்படியாக நடக்க ஆரம்பிக்கும்.

ஆனால் டெல்லியில் பிறந்த குழந்தை ஒன்று பிறந்து சில மணிநேரங்களிலேயே வேறொருவரின் உதவியுடன் நடக்கப் பழகியுள்ளது.

# 'காலா'வில் இவர்களுமா?



ரஜினி நடிக்கும் 'காலா' படத்தின் படப்பிடிப்பு நேற்றையதினம் மும்பையில் தொடங்கியது.

தனுஷின் வுண்டர்பார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் தயாரிக்க, பா.ரஞ்சித் இயக்கும் இப்படத்தின் நாயகியாக ஹேமா குரேஷி நடிக்கிறார்.

இவருடன், ஈஸ்வரி ராவ், நானா படேகர், அஞ்சலி பாட்டீல், சமுத்திரக்கனி, சம்பத், ரவி கேளா, சாயாஜி ஷிண்டே, பங்கஜ் த்ரிபாதி, மிகி மகிஜா, மேஜர் பிக்ரம்ஜித், அருள்தாஸ், அரவிந்த் ஆகாஷ், "வத்திகுச்சி" திலீபன், ரமேஷ் திலக், மணிகண்டன், அருந்ததி, சாக்ஷி அகர்வால், நிதிஷ், வேலு, ஜெயபெருமாள், கருப்பு நம்பியார், யதின் கார்யகர், ராஜ் மதன், சுகன்யா உட்பட மிகப் பெரிய நட்சத்திரப்பட்டாளமே இப்படத்தில் நடிக்கிறது.

சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். கபிலன், உமாதேவி பாடல்கள் எழுதுகின்றனர். 'மெட்ராஸ்', 'கபாலி' படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த முரளி ஜி, இப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்கிறார். (ஓ)

# மீண்டெழுந்து சம்பியனானது ஆவரங்கால் இந்து இளைஞர்



நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடாத்தி வந்த கரப்பந்தாட்டத் தொடரின் 'ஏ' பிரிவு இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மத்திய விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 3-1 என்ற சுற்றுக் கணக்கில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வென்றது.

யாழ். மாவட்டத்தின் அசைக்க முடியாத அணியாகத் திகழ்ந்து வந்த ஆவரங்கால் இந்து இளைஞர் கழகம், கடந்த சில கழகத் தொடர்களில் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் அரையிறுதியுடன் வெளியேறி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுமையான மருத்துவம்



கிழிந்த டெடிபியர்களைத் திருத்தியமைக்கும் வகையில் குழந்தைகளுக்கான வைத்திய சாலை ஒன்று டுபாயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில், டுபாய் ஜனாதிபதி ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்துாம், துணை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் 4 குழந்தைகளுடன் கலந்து கொண்டனர்.

வைத்தியர்கள் அங்கு வரும் குழந்தைகளிடம் பொம்மையின் உடல் நலம் குறித்து கேட்டு அறிவர். இதன் மூலம் தங்களது உடல் நலம் பேணுதல், சுகாதார அடிப்படை கல்வி மற்றும் சிகிச்சை முறைகளை குழந்தைகள் அறியமுடியும். வைத்தியசாலைக்கு வருவதில் உள்ள பயமும் நீங்கும் என வைத்தியர்கள் கருதுகின்றனர்.

# கொம்மந்தறை இளைஞர்கள் இறுதிக்குத் தகுதி

புலோலி இளைஞர்கள் கழகம் நடத்தும் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொம்மந்தறை இளைஞர்கள் விளையாட்டுக் கழகம் தகுதிபெற்றது.

புலோலி இளைஞர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப்போட்டிகள் நேற்றைய தினம் நடைபெற்றன.

ஓர் அரையிறுதியில் இளந்தளிர் விளையாட்டுக் கழகத்துடன் கொம்மந்தறை இளைஞர் கழகம் மோதியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் விளையாட்டுக் கழகம் 62 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் வெற்றியிலக்கைத் துரத்திப் பிடித்த கொம்மந்துறை இளைஞர் கழகம் வெற்றிபெற்றது.

இதனையடுத்து கொம்மந்தறை இளைஞர்கள் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக் குத் தகுதிபெற்றது. (ஐ-23)



## சாதாரணதரப் பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு

தற்பொழுது பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்த நிலையை கவனத்தில் கொண்டு 2017 கல்வி பொதுதராதர சாதாரண தரப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால எல்லையை நீடிக்குமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணி இம் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தது. இதனை ஜூன் மாதம் 15ம் திகதி வரையில் நீடிப்பதற்காக கல்வி அமைச்சர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (எ)

## சீன நிவாரண விமானம் இலங்கைக்கு

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 2.2 மில்லியன் டொலர் பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்குவதாக சீனா அறிவித்துள்ளது. கூடாரங்கள், போர்வைகள், விரிப்புகள், மழைக் காலணிகள், உயிர்காப்பு அங்கிகளைக் கொண்ட இந்த உதவிப் பொருட்கள் வாடகை விமானம் மூலம் விரைவில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும் என்று சீன அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ)

## சிகரெட் கடத்தியவர்கள் கைது



சட்டவிரோதமாக இலங்கைக்கு கடத்தப்பட்ட மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள், விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. 300 சிகரெட் பைக்கற்றுக்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக, சுங்கப் பிரதிப் பணிப்பாளர் பராகிரம பஸ்நாயக்க குறிப்பிட்டுள்ளார். இச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று நள்ளிரவு மற்றும் இன்று அதிகாலை 2 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கட்டாரில் இருந்து வந்த இரு விமானங்களில் குறித்த நபர்கள் பயணித்துள்ளனர். (உ)


# சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் அல்ல



"உண்மையான எதிர்க்கட்சித் தலைவராக நாம் சம்பந்தனை ஏற்க முடியாது. அவர் முழு நாட்டின் பிரச்சினைகளையும் நாடாளுமன்றில் பேசுவதில்லை. வடக்குக்-கிழக்கு மாகாணங்களின் பிரச்சினையை மட்டும் தான் பேசுகின்றார்.அரசியல் காரணங்களுக்காக அவர் இந்தப்பதவியை வகிக்கின்றார்" இவ்வாறு அதிரடிக் கருத்தை வெளியிட்டுள்ளார் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன்.

"எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் ஏற்றதன் மூலம் ஒரு செய்தி இந்த நாட்டின் சிங்கள மக்களுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.நாம் இந்த தேசத்தின் ஒரு பங்காளியாக மாறிவிட்டோம் என்பதும் , தனி நாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம் என்பதும் தான் அந்தச் செய்தியாகும்" என்றும் அவர் கூறியுள்ளார்.(இ)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி: அவந்த ஆட்டிக்கல

## வெள்ளத்தில் மகிந்தவின் புதல்வர்கள்





நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, யோஷித ராஜபக்ச, ரோஹித ராஜபக்ச ஆகியோர் இணைந்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். எல்பிட்டிய அவித்தாவ, பாணிகொட பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் நடவடிக்கைகளுக்காக ரோஹித மற்றும் யோஷித ஆகியோர் சென்றனர்.வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை அங்கிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையிலும் மகிந்தவின் பிள்ளைகள் ஈடுபட்டனர். (அ)

## முத்தமிட்ட ஈழத்தமிழருக்குச் சிறை



ஆஸ்ரேலியாவில் புகலிடக் கோரிக்கையாளரான பெண் ஒருவரை, முத்தமிட்ட குற்றச்சாட்டில், குடி வரவுத் தடுப்பு முகாம் ஒன்றின் பாதுகாப் புப் பணியாளராகப் பணியாற்றிய ஈழத் தமிழர் ஒருவருக்கு ஒரு மாத சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆஸ்ரேலியாவின் தி ஏஜ் நாளிதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஒரு மாத சிறைத்தண்டனை முடிந்த பின்னர், 200 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்றும், பாலியல் குற்றவாளிகளுக்கான சீர்திருத்தத் திட்டத்தில் பங்கேற்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது. (ஊ)

## கத்திக்குத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று இரவு சித்தாண்டி - 4, உதயன்மூலை பாடசாலை வீதியில் இடம்பெற்றுள்ளது. இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரண மாகவே இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப் படும் இருவர் ஏறாவூர் பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)



## உப்புக்களி வீதி புனரமைப்பு

கப்பூது காட்டு கந்தசாமி கோவில் திருவிழா எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாக உள்ளது. இதனை முன்னிட்டு பக்தர்கள் சென்றுவர வசதியாக சுமார் ஒன்றரை கிலோமீற்றர் நீளமான உப்புக்களி வீதி செப்பனிடும் பணி நேற்று நடைபெற்றது. ஆலய நிர்வாகத்தினரும் பொது மக்களும் விடுத்த கோரிக்கையை அடுத்து சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் கட்சியின் வடமாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (இ-11)

# கவச வாகனத்தில் சடலங்கள்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் இராணுவத்தினர் துருப்புக் காவி கவச வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அதிக ஆழமற்ற நீர்ப் பகுதிகளிலும் பயணம் செய்யக் கூடிய '15 பிரிஆர்' மற்றும் 'டபிள்யூஎம்இசட்" துருப்புக் காவி கவச வாகனங்கள் இந்த மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

புலத்சிங்கள பகுதியில் வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்கும், இறந்தவர்களின் உடல்களை ஏற்றிச் செல்வதற்கும் இந்தக் கவசவாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நடவடிக்கையை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். (அ)



## இரு பெண்கள் சாவு

பெந்தோட்டை கஹபிலியகந்த பிரதேசத்தில் இன்று காலை ஏற்பட்ட விபத்தில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். கொழும்பிலிருந்து காலி நோக்கிச் சென்ற லொறி, எதிர்த் திசையில் வந்த காருடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.காரில் பயணித்த 35 மற்றும் 37 வயதுடைய பெண்களே உயிரிழந்துள்ளவர் களாவர். (இ)

## நாளை நாளும் கோளும்

30.05.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 16ஆம் நாள்

பஞ்சமி பி.ப. 03.02 வரை | பூசம் பி.ப. 05.53 வரை | மரணயோகம் | கரிநாள்

இராகுகாலம் 02.52-04.22 | சுபநேரம் 10.22-11.52 | எமகண்டம் 08.52-10.22

கொடியேற்றம்: இணுவில் கந்தசுவாமி, அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி, அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார், சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார்,நாரந்தனை கந்தசாமி

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிந்தனை | இன்சொல் | ஜெயம் | பாராட்டு | போட்டி | துணிவு | நஷ்டம் | யோகம் | ஈகை | உயர்வு | அமைதி | சிரமம் |

எதிரொலி
Ethiroli

# இலங்கைக்கு உதவுவோம்




இலங்கையில் பெய்துவரும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ அனைவரும் கைகோர்ப்போம் என்று பிரபல இந்திய மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒடிசா கடற்கரையில் சிற்பம் ஒன்றை வடிவமைத்துள்ளார். அதில் இலங்கைக்கு உதவ அனைவரும் கைகோர்ப்போம் என்று குறிப்பிட்டுள்ளார். நீண்ட கைகளை உருவாக்கி, அதில் கண்ணீர் வடிக்கும் கண்களுடன் கோரிக்கை வாசகத்தை பதிவிட்டுள்ளார். (உ)

## திண்மக்கழிவுகள் சேகரிப்பு

உலக சுற்றாடல் தினம் ஜூன் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இதன் ஓர் அங்கமாக ஊர்காவற்றுறை பிரதேசசபையால் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் திண்மக் கழிவுப் பொருட்களை பொதுமக்களிடம் இருந்து சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நாளை மறுதினம் ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு, கோட்டையடி, வைத்தியசாலை வீதி, ஒலுவில் வீதி, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களிலும் வெள்ளிக்கிழமை அனலைதீவுப் பிரதேசத்திலும் திண்மக்கழிவுகளை சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஊ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**2005 .05.29**

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தீவிரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்தது.

## வெள்ள விடுமுறை வெள்ளி வரை

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய 7 மாவட்டங்களிலும் சகல பாடசாலைகளுக்கும் வெள்ளிக்கிழமை வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் இன்னும் அனர்த்த அபாயம் நீடிப்பதாலும், இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளதாலூமே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஆ)

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு

அனர்த்தம் ஏற்பட்ட பல பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான எரிபொருள் விற்பனை நிலையங்கள் வெள்ளம் காரணமாக மூடப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகளைத் தயார் செய்வதற்கு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வாள்வெட்டில் காயம்

வளவுக்குள் நுழைந்த திருடர்களைப் பிடிக்க முயன்றவர், வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அல்லாரை வடக்கைச் சேர்ந்த பாலசுந்தரம் மனோகரன் (வயது-55) என்பவரே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருடர்களின் வாள்வெட்டில் காயமடைந்து, யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-55)

### யாழ்.மாநகர எல்லைக்குள்

## 104 கட்டங்களுக்கு அங்கீகாரமில்லை

"யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் மட்டும் 104 அங்கீகாரமற்ற கட்டடங்கள் உள்ளன. கடந்த காலத்தில், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைநிலவிய போதே மேற்படி அங்கீகாரமற்ற கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த அங்கீகாரமற்ற கட்டடங்கள் குறித்து தொடர் நடவடிக்கைகள் தற்போது மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"- என்று யாழ்.மாநகரசபை தெரிவித்துள்ளது. (அ-33)

## புதிய அமைப்பு உதயம்





வடக்கு கிழக்கு வாழ் மலையக மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி வடக்கு கிழக்கு வாழ் மலையக மக்களின் ஒன்றியம் நேற்று ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அத்தோடு வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மலையக மக்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் சவால்கள் குறித்து ஆராயும் மாநாடும் இடம்பெற்றது.

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்ற மாநாட்டினை தொடர்ந்து பத்திரிகையாளர் சந்திப்பும் இடம்பெற்றது. ( ஆ)

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் சி. சிறீதரன் மற்றும் இ.அங்கயன் தலைமையில் இன்று காலை 9.40 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகியது. இன்றைய கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் மத்திய அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-13)

### வாசகர் கவனத்துக்கு...

**உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே "எதிரொலி"யில் பிரசுரிப்போம். தகவல்களை** ethirolimedia@gmail.com **என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவே அனுப்பிவைக்கலாம்.**

## மண்ணின் மைந்தர்கள் அரையிறுதி அணிகள்

'மண்ணின் மைந்தர்கள்' வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிக்கு நெற்கொழு கழுகு, வதிரி ஸ்ரீ முருகன், இணுவில் கலை ஒளி, சாவகச்சேரி சிவன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

வடமாகாண ரீதியாக மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் கிரிக்கெட் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடர் 5 ஓவர்கள் கொண்டதாகவும், 6 பேர் விளையாடும் வகையிலும் நடத்தப்படுகின்றது. (ஐ-23)

## நாடளுமன்றுக்கு பாதுகாப்பு

கடும் மழையால் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றுக்குள் வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நாள்களாக கடும் மழை பெய்யாத காரணத்தால், நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்ன ஓயாவின் நீர் மட்டம் அதிகரிக்கவில்லை. இன்றும், நாளையும் கடும் மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றுக்குள் வெள்ளம் உள்நுழையக் கூடும் என்ற அச்சத்தில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

## செய்தியாளர்கள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் பிரதேச செய்தியாளர்கள் தேவை.

குறிப்பு: செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் மின்னஞ்சலில் அனுப்பக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் புகைப்படம் மற்றும் சுய விவரங்களை
ethirolimedia@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## கைவிடப்பட்ட பயணம்

தென்னிலங்கையில் ஏற்பட்ட அனர்த்தங்களையடுத்து, இந்தியத் தூதரின் வடக்குப் பயணம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்தூஸ் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, பொது நூலகத்துக்கு 60 லட்சம் ஷரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்யவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

## பாரதியை வென்றது புத்தூர் வளர்மதி



நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த கரப்பந்தாட்டத் தொடரின் 'பி' பிரிவு இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற சுற்றுக் கணக்கில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது. (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 29.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.